**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**வரலாறு- தரம் 10 / மூன்றாம் தவணை - வாரம் - 2**

**தயாரிப்பு : திருமதி.S.சுஜிதா ( கே / தெஹி / களனி த.வி )**

## சௌரத் (கி.பி.1604 – 1635)

01)பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01.சௌரத் மன்னனின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிடுக.

02.கி.பி.1604 ம் ஆண்டு கண்டி இராச்சியத்திற்கு மன்னனான செனரத்துக்கும் விமலதர்ம சூரியனுக்கும் இடையிலான தொடர்பு யாது?

03.செனரத் மன்னன் எதிர்நோக்கிய சவால்கள் 2னைக் குறிப்பிடுக.

04.செனரத் மன்னன் யாரைத் திருமணம் செய்து அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொண்டான்?

05.குசுமாசனதேவிக்கும் விமலதர்மசூரியனுக்கும் மன்னன் மூலம் எத்தனை மகன்மார்கள் பிறந்தனர்?

06.செனரத் மூலம் குசுமாசனதேவி பிரசவித்த மகன் எத்தனை பேர்?

07.செனரத் மன்னன் கண்டி இராச்சிய அதிகாரப் போராட்டத்தை எவ்வாறு நிவர்த்தி செயதான்?செனரத் மன்னன் மூன்று இளவரசர்களிடையேயும் கண்டி இராச்சியத்தை எவ்வாறு பகிர்ந்தளித்தனர்?

08.மகா ஆஸ்தான குமரன் என அழைக்கப்பட்டவன் யார்?

09.இளம் பராயத்திலிருந்தே கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க செனரத் மன்னனுக்கு உதவியவன் யார்?

10.கி.பி.1630ம் ஆண்டில் ரந்தெனிவல போரில் போர்த்துக்கேயரை படுதோல்வி அடையச் செய்தவன் யார்?

## இரண்டாம் இராஜசிங்க மன்னன் (கி.பி.1635 -1687)

11.செனரத் மன்னன் மரணித்த ஆண்டு எது?

12.இரண்டாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தின் மன்னனான ஆண்டு எது?

13.2ம் இராஜசிங்கன் எதிர்நோக்கிய சவால்கள் நான்கினைக் குறிப்பிடுக.

14.போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்ய 2ம் இராஜசிங்கன் போரிட்ட இரண்டு யுத்தங்களையும் இவை இடம் பெற்ற ஆண்டுகளையும் குறிப்பிடுக.

15.போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்ட அரண்டாம் இராஜசிங்கன் உதவியைப் பெற்றுக் கொண்ட அந்நிய நாட்டினர் யார்?

16.ஒல்லாந்தரின் உதவியுடன் போர்துக்கேயரை இந்நாட்டின் கரையோரத்திலிருந்து முற்றாக வெளியேற்றிய காலப்பகுதி யாது?

17.போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிய பின் அவர்கள் இருந்த பிரதேசங்களில் ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டவர் யாவர்?

18.ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தின் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்ட ஆண்டுகள் யாது?

19.2ம் இராஜசிங்கன் ஒல்லாந்தருக்கு எதிராக பலதாக்குதல்களை மேற்கொண்ட ஆண்டுக் காலப்பகுதி யாது?

20.கண்டி இராச்சியத்திற்கு உரித்துடையதாக இருந்த கரையோரப் பிரதேசங்கள் நான்கினையும் குறிப்பிடுக.

21.இரண்டாம் இராஜசிங்கன் மரணித்த ஆண்டு எது?

22.IIம் விமலதர்ம சூரியன் யாருடைய மகன்?

23.II ம் விமலதர்ம சூரியனால் மேற்கொள்ளப்பட் பௌத்த சமயப் பணிகளைக் குறிப்பிடுக.

24.II ம் விமலதர்மசூரிய மன்னன் இறந்த ஆண்டு எது?

## <u>ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்க மன்னன் (கி.பி.1707 – 1739)</u>

25.ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்க மன்னனின் மகன் யார்?

## நாயக்க அரச வம்ச ஆட்சி (கி. பி 1739 – 1815)

### <u>ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் (கி.பி.1739 -1747)</u>

26.ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னனின் மறைவின் பின் கண்டி இராச்சியத்தின் மன்னனானவன் யார்?

27.நாயக்க வம்ச ஆட்சியின் முதல் மன்னன் யார்?

28.ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் செய்த பௌத்த சமயப் பணிகளைக் குறிப்பிடுக.

29. .ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன் இறந்த ஆண்டு எது?